**38 உலவாக் கோட்டை அருளிய படலம்**

மதுரை மாநிலத்தில் வேளாளர் குடியிலே அடியார்க்கு நல்லானும் அவனது மனைவிதருமசீலையும் வாழ்ந்து வந்தனர். நல்லவனுக்கு கிடைக்கும் ஊதியத்தில் ஆறிலொரு பங்கைஅரசுக்கு செலுத்தி விட்டு மீத முள்ளதை சிவனடியார்களுக்கு அமுது படைப்பதில் செலவழித்து அதனையே விரதமாகக் கொண்டு வாழ்ந்து வந்தான். நல்லானின் நற்குணத்தை உலகறியச்செய்ய எண்ணம் கொண்ட ஈசன் அவனது நிலத்தில் விளைச்சல் குறையுமாறு செய்தார்.

செல்வம் இல்லாமல் போனாலும் மனம் தளறாத நல்லான் கடன் வாங்கி அடியார்களுக்குஅன்னமிட்டான் நல்லான். இறுதியில் மனைவியுடன் பட்டினியும் கிடக்க நேரிட்டது. தமதுவிரதத்தை முடிக்க முடியாததால் தான் உயிரோடு இருப்பதில் அர்த்தமில்லை என்ற முடிவுடன், ஐயனிடம் தனது சிவ வழிபாடு தடைப்பட்ட பின் இறப்பதே மேல் என வருத்தமுடன்முறையிட்டான்.

அப்போது அவனது இல்லத்தில் எடுக்க எடுக்க குறையாத அரிசிக் கோட்டையை தாம் அமைத்துள்ளதாகவும் அதிலிருந்து தானியங்கள் எடுத்து சிவனடியார்களுக்கு அமுது படைத்து தடையில்லாமல் சிவ தோண்டு புரியலாம் என ஓர் அசரீரி ஒலித்தது.

ஐயனை வணங்கி வீடு சேர்ந்த நல்லான் அசரீரி கூறியபடி அவனது இல்லத்தில் அரிசிக் கோட்டையைக் கண்டு மகிழ்ந்து வந்தவர்களுக்கு எல்லாம் அமுது படைத்து இறுதியில் மனைவியுடன் சிவபதம் அடைந்தான்.

**பல்லவி**

அடியார்க்கு நல்லான் சிவனடியார்களுக்கு
அமுது படைப்பதில் தன் பொருளைச் செலவழித்தான்

**அனுபல்லவி**

பிடியரிசியும் இன்றி கடனும் கொடுப்பாறின்றி
மனைவி தர்ம சீலையுடன் பட்டினி கிடந்தான்

**சரணம்**

வாட்ட முற்றிறக்கத் துணிந்த நல்லானைத் தடுத்து நிறுத்தி
வற்றாத அரிசிக் கோட்டை அளிப்பதாய் விண்ணில் உரைத்தீர்
வீட்டையடைந்து தான்ய கோட்டையைக் கண்டதும் நல்லான்
விருந்து சமைத்து படைத்தான்